உ

கணபதி துணை.



மதுரை ஸ்ரீ பிரமானந்தசுவாமி கல் மடம் மஹா சன்னிதானம்

ஸ்ரீ வீர சோமசுந்தர சுவாமிகள் மீது

சோமேச நெஞ்சுவிடு தூது.

சோமேச நாதர் தசாங்கம்.

சோமேச நாதருலா வரலாறு.

சோமேச நாதருலா.

இயற்றியவர்

சோம. பெருமாள் சுவாமி

பதிப்பாளர்- சேலம் ஆத்தூர் பெத்தை வீட்டு

அ. சி. ராமசாமி நாயக்கர்.

உ

சோமேச நெஞ்சுவிடு தூது.

விநாயகர் துதி.

தேமிகுந்தொளிர் தென்மதுரையிற்
சோம சுந்தர சுவாமிகள் பாற்செலும்
மேமனத்தி நற் றூதை விடுத்திட
மாமுகந் திகழ் வான்பொருள் காப்பதே.

கலிவெண்பா.

பூவே மரகதமே பொன்னே வதனொளியே
தாவா வளருந் தனிக்கரும்பே - கோவாத
முத்தே மணியே முனிவரரை யுய்விக்குஞ்
சித்தே வதனிருப்பே தேனேநீ - நித்த நித்தந்
தேறும் பெரியோர்பால் - தேவாமிர் தானவளே
சேறுநீ ரும்போற் சிறிதகலாச் - சீறடியாய்
என்னைப் பலவிதத்து மேற்றுதற்கு வந்தடைந்த
அன்னையே நீதா னறியாயோ - வென்னியல்பு
தாயறியாச் சூலுறினுந் தாரணியி னெஞ்சமே
நீயறியா வேறுசெயல் நேறிடுமோ - தாயேநீ
பஞ்சவர்க்குச் சுந்தரர்க்கும் பண்டுபல வன்பர்கட்குஞ்
செஞ்சரணங் கன்றிச் சிவப்பேற - நெஞ்சுவந்து
எத்தனையோ தூதா யெழுந்தருளி னுணந்த
வித்தகன்பாற் றூதாம் வினையதற்கிங் - கொத்திடுவா
யுன்னுற்றற் காகாத வுண்டோ வுலகதனிற்
சின்னஞ்சிறுசோ தெரியாதோ - என்னினுநான்
கூறுமொழியதனைக் கொள்ளுவாய்க் கூடலிலே
ஏறு பரிவனைய விந்தனமும் - வீறுமணி
விற்ற வணிகன் விறல்வேந்தா நற்கனியைப்

பெற்றுலகங் காத்தருளும் பேரிறைன் - இற்றைநாள்
யாங்காண மேனி யமைத்த படிவத்தோன்
ஓங்கார வித்தைதனை யோதுவிப்போன் - ஆங்கவன்றன்
தங்கும் பதிகளெல்லாம் தங்காது கேள்வதரி
துங்கவன மோவுடவின் றாநிழலோ - பொங்குபுகழ்
பாண்டவன்றன் றேரோ பதுமபதனே முதலோ
நீண்ட வளர்சிருங்கை யின்னகரோ - ஆண்டவர்தாங்
கோவில் கொண்டூரோ குலவுபொருள் வைப்பதியோ
தேவருவக்குந் திருக்களரோ - ஆவலுடன்
அன்னை யிலமாக வநேகநாள் வீற்றிருந்த
சென்னைநக ரோகம்பலைத் தென்பதியோ -மன்னவனுய்
கோலோச்சி யெம்மையாட்கொண்ட திருக்கூடலெனும்
றூலேறு மாலவாய் நண்ணகரோ - மாலாய் நீ
ஒன்றென்றுய்ச் சென்றுய்ந் துழலே லதுபழமை
அன்று வதிட்ட ரவிசியற்றுங் - குன்றதனில்
வேதம் புகழ விழைவோங்க நின்றிரங்குஞ்
சீதம் பிறங்குபுனற் சீவநதி—போதுநகர்
ஆத்தூரா மந்த வளகா புரிசென்றுற்
பார்த்திடுவா யின்னே பயணமதா - யாத்தமுடன்
செல்லுவா யென்னுரையைச் சிந்தி யிடைவழியில்
நல்லதென மற்றொன்றை நாடாதே - யல்லலெலாங்
கூட்டுவிக்கு மாதர் புலவிதனைக் கொள்வாயேல்
வீட்டு விளக்குவிட்டி லொப்பாவாய் - தேட்டமது
கொண்டாடல் மிகவினிது கோடீச ஞுயுலகர்
கொண்டாட வாழ்வமெனக் கோறுதியேல்—
பெண்டு பிள்ளை
ஏசப் பிணிமலிய வெட்டுணையுஞ் சாந்தமின்றி

பார்சத் தெமன்றாதர் பற்றிடுவார் - தேசமெல்லாங்
கட்டியர சாளக் கண்ணியமா யெண்ணுதியேல்
வெட்டியுனை வீழ்த்திடுவார் வேற்றரசர்-விட்டிதெலாம்
அண்ணல் குருபரனு ராட்கொளவா மூம்பதியைத்
திண்ணம் வலமாகச் சேவித்தா - வண்ணமுள
சித்திரங்க ளெல்லாமுஞ் சிற்பர் திறங்காட்ட
முத்திப் பதியேழில் மூன்றெனவே - சத்தொடுசித்
தானந்தங் காணு மடியவர்கட் காடியெனத்
தானமைந்த மாடத்திற் றுசாதி - தேனெனவே
மாந்த வுரைத்தருளும் மாவேத வாக்கினையீண்
டேந்திக் கலியுகத்தோ ரீடேறச் - சாந்தியுட
னோதுஞா னக்கடலை யுண்மைக் குறையுளினைத்
தீதணுகா மோனச் செழுஞ்சுடரைக்—காதுபவங்
கொல்லுங் கடுவதனைக் கோலக் கருணையுடன்
நல்ல முதிதைக்கு நாயகனைப் - பல்லோர்சொல்
நீதி வடிவாம் விராகவெற்பை நேயத்தால்
ஓதுஞ் சுருதியத னுட்பொருளைக் காதலுற்று
இந்த்ராதி தேவ ரியக்கர் முனிவரொடு
கந்தருவ சித்த கணங்களெல்லாம் - நொந்திடவே
பூவதனிற் றென்றசையின் பொல்லாங் ககற்று முயர்
காவலனைக் காண்பாய்நீ காணுயேற் - கோவலனும்
வேணுகா னத்தோன் விலாசங் கருங்கலினுற்
காணுமட மண்மைத்தே காதமல்ல - நாணமேன்
ஏகுவாய் தூதர்க் கிது நீதி யாங்குள்ளோர்
போகாதே நீயார் புகலென்றுற் - றுகமுடன்
பொய்யேன் கொடிதான புண்மையே னென்றக்கால்
மெய்யாகச் சேர்க்க விரும்பார்கள் - உய்வதற்கு

சின்னஞ் சிறுமதியேன் செய்வேன்குற் றேவலெனப்
பன்னி யவருறவைப் பாங்கேற்று - என்னபணி
யிட்டாலுங் கேட்டே யிதமாக நீயிருந்தால்
பட்டாங் குரைத்தப் பரம்பொருளே - மட்டாருஞ்
செங்கழுநீர்த் தாரானைச் சேரப் பணித்திடுவார்
அங்கெய்தி முன்னே யடிபணிந்தே - யிங்கிதமா
வாய்பொதிந்து தானை மடக்கலுடன் றுள்சேர்த்துச்
சாய்வாக மேனி தனையொடுக்கி - ஓய்வாக
நின்று லெவணீ நேடுபொருள் யாததனை
நன்று யுரையென்னு நல்வார்த்தை - யொன்றளவில்
அந்தோவோர் பேதை யலமந் துருகிநிதம்
எந்தா யுனதழகி லீடுற்றே - சந்ததமும்
எண்ணியெண்ணி யேங்கிமிக வெய்த்தா ளுடலதனி
னண்ணும் வலியின்றி நைகின்றாள் - புண்ணியவுன்
றேண்மாலை வேண்டினு டாவெனநீ தோத்தரித்தால்
நாண்மிகவே சொல்வாய் நடவாத - வீண்மதியின்
செய்யு முல்கர்திறம்வேட் டொவ்வொன்றினையுஞ்
செய்ய முயலலுறுஞ் சீரில்லாள் - வெய்யவுரை
சொல்லவந்த பாவாய தொவ்வாது தூரப்போ
நில்லாதே யென்றவுரை நேர்ந்திடுமேல் - மெல்லியலே
வேதமுதல் விண்ணோருங் காணுவி முப்பொருளின்
பாதமல ரில்வீழ்ந்து பற்றியே - ஓதிடுவாய்
என்ன முயன்று லின்னறு னெய்தினுமுன்
பொன்னடியி னீங்காத புந்தியாள் - மன்னவனே
வில்லடியுங் கல்லடியு மீனுன் பிரம்படியும்
நல்ல மலரா நயத்தலொடு - கொல்லவந்த
பூதனைபா லுண்டருளும் பூமானே யற்றதவப்

பாதகர்க்கு மேனாட் பதவிதரு - நாதனே
குற்றங் குணநீயே கூடலா யேன்றனைமுன்
சொற்றாரே சம்பந்தத் தூயமுனி - மற்றதனால்
எல்லா முனது செய லல்லா தெவையுளது
வல்லாளா மாலை வழங்கென்று - சொல்லினிதா
யீங்கு மருண்மாலை யெய்தாமு னெவ்விதத்தும்
வாங்கியருண் மாலையொடு வா.

ஸ்துதி

தும்பிமுகத் தண்ணனணி துன்புறு பவக்கடற்கோ
ரம்பி யெனப்பூவி லவதரித்தே—வெம்புறுமென்
பந்தமறுத் தேற்றிடுநம் பார்த்திபனுஞ் சோம
சுந்தர னற்றாளே துணை.

சுபம்! சுபம்!! சுபம்!!!

சோமேச நாதர் தசாங்கம்

1 பேசுவாய்-பைங்கிளியே-பெத்தமழித்-தான்பெயரை
தூசறு நற்சோம சுந்தரனென் — றாசைகொள
அண்டங் கடந்தநித்தி யானந்தற் கெப்பெயரும்
உண்டதனை லோதிடுவா ரோர்

2 அஞ்சுகமே நீயுரைப்பாய் ஆதரவாய் நற்றாளை
வஞ்சமறச் சென்னிமிசைவைத் தானூர்-பஞ்சமெலாம்
ஓடக்கோ ளீண்டி யுறங்குகங்கால் மாற்றமிடை
காடரிடைக் காடெனவே கண்டு

3 கொஞ்சுங் கிளிப்பிள்ளாய் கூறிடுவாய் வைகலுமென்
நெஞ்சம் படுதுயரம் நீக்கினின்றோன்—மஞ்சமெனத்
தங்குதிரு நாடு தடாதகையார் ஆட்சிநிதம்
பொங்கிவளர் நாடெனவே போந்து

4 காரூரும் பைங்கிளியே கையா கதிதருமெங்

கோறுறு தன்னையுநீ கூறிடுவாய் - தேனரும்
வைகையென் - வோதல் வழக்கோ வருமடியார்க்
குய்கைத்ரு கண்ணளியென் றேது
5 சாம மணிநிறத்து தத்தாய் தனைத்தருவான்
சேமவரை யேததனைச் செப்புவாய் - சேமவரை
எப்போது நீங்கா தினித்தருளும் வாசிட்ட
மெய்ப்பா நறுமலையே மெய்
6 பச்சைப் பசுங்கிளியே பாரார வந்தெனது
இச்சையெலாந் தீர்த்தான் றனே றுரையாய்-உச்சிதமாம்
வேதம் புராணமுன்னும் வித்தையென்பரன்னவையோ
வதந்தீர் நெஞ்செனவே யெண்
7 சோலை வளர்சுகமே துன்பந் துடைத்தாண்ட
கோலர்க் கியைந்த கொடிகூறாய்—சேலையல
வன்பீர் வருகசெல்க அல்லா ரெனவசைத்து
முன்பகரு நல்லுரையே முன்
8 தத்தையே நாயேற்குத் தாரரக மாய் நின்றருளிரும்
வித்தையே காட்டவருண் மேனிகொண்ட-சித்தர்பறை
ஒன்றே பொருளென் றுரைக்குமறை தானெனவே
நன்றே யுறைப்பாய் நனி
9 செம்முகத்து பைங்கிளியே தேவாதி தேவரெலாம்
விம்மக் கடையேனை வீட்சித்த—செம்மல்படை
யாததனைக் கூறாய்நீ யிஃதன்றன், றேயுரைக்கும்
நேதி மொழிப்படையா நேர்
10 பச்சை நிறக்கிளியே பாருலகி லென்பவத்தை
எச்ச மறஅழித்த எங்கோன்தார் - நிச்சயித்து
சொல்வாய் மருக்கமழுந் தூமலரோ பூரணமாய்
நில்லா வெனும்வாக்கா நேர்ந்து முற்றிற்று.

சோமேசநாதருலாவின் வரலாறு:

மன்னியசிறப்பின் வானவர் வேண்டத் தென்மலையிருந்த சீர்சால் முனிவரராகிய மிகத்தெளிகேள்வி அகத்திய முனிவர் அருந்தமிழ் பரந்த பெருந்தமிழுலகில் நிலையுறும் பொருளை யறியவிரும்புவோருலைவுறுவண்ணம் அவதரித்தருளிய மாட்சிமைதங்கிய திருவளரும் ஸ்ரீ வீர சோமசுந்தர சுவாமிகளென்னும் ஞானபானுவின் புகழினையறியாரில்லை.

ஒருபோது, வங்கத்துறையாய்த் தங்குந்திருவுறை தூத்துக்குடியெனு மேத்தரும் வளங்கொண்ட திருமந்திரபுரத்தில் ரெட்டியார் வகுப்பில் உயர்குடியிற் பிறந்து "இருவேறுலகத்தியற்கை" யென்பதற்கெதிர் மறையாகிய அறிவுந்திருவு முருவும் படைத்துக் கொடையும் பூண்டு பேரலைவாய்தருசீரலைவாய் முதலிய புண்ணியப் பதிகளைப் போற்றுந் தலைவராய் குறுநிலம்புரக்குங் கொண்டலாய் நிலவுங் கந்தசாமி ரெட்டியார் மனையில் நீளத்தங்கும் பெருமாளையா வென்னும் சாதுவோடு வல்லநாட்டிலிருந்து மறத்துறை நீங்கி யறத்துறை நிலைத்த சங்கரசுப்பா சாஸ்திரிகள் வந்து வேதாந்த சாஸ்திரவிடயமாய்க் கலந்துரையாடுங்கால் அருங்குணக்களஞ்சியமாய ஸ்ரீ ராகவன் கேட்டருளிய சர்வ வேதாந்த சாராமிர்தமாகிய வசிட்ட சங்கிதையென்னும் வாசிட்டசாஸ்திரங் கேட்டலே ஞானமடைதற்குத்தக்க சாஸ்திரமாகும் அதுவோ மிகப் பொருட்பொதிவுகொண்டதாதலின் யாருமெளிதிற் பாடஞ்சொல்லுதலியலாது, அந்நூலி

ணுட்பங்களையெல்லாம் அங்கை விளங்கனியென அறி விக்க வல்லார்யாரெனில் வேதாந்த வுலகில் மேதைக் களஞ்சியமாய்க் கருணைக் கடலாய் ஒழுக்கமலையாய் ஞானபானுவாய் வாக்கிற் பாரதியாய் மதுரையம் பதியில் பிரமானந்தாள் மடத்திற் பிறங்கும் பெருமா னாகிய ஸ்ரீமத் சோமசுந்தரசுவாமிகளே தக்கவராவார் கள் என்ச் சங்கரசுப்பா சாஸ்திரிகள் சொல்லி, ஆனால் அவர்கள் மதுரையிலிருக்கிறார்கள் அவர்கள்பாலெப் படிக் கேட்பது வாசிட்டமென்றால் பலர் கூடுவார்கள் எல்லார்க்குமுண்டியுமுறையுளும் வழங்கி யுபசரிப்பார் யாவருளர் என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது உள்ளிருந்து கேட்ட குலமும் குணமும் அறிவுந் திருவும் வாய்ந்த கந்தசாமி ரெட்டியாரவர்கள் நேரே வந்து என்ன ஆலோசிக்கின்றீர்கள் என்றுகேட்க அதற்கு ஷை சங்கரசுப்ப சாஸ்திரியவர்கள் ஆதியோ டந்தமாகச்சொல்ல ஆயின் யானும் பாடங்கேட்கிறேன் சண்டமையுங்களென உடனே மூவருமேமதுரைவந்து பிரார்த்திக்க நேர்ந்துசென்று அனேகம் விற்பன்னரும் அடியவர்களும் சாஸ்திரிகளும் கேட்க உபதேசித் தருளி பூர்த்தியான சமயம் வெகுசிறப்பாக ஊர்வலம் செய்வித்தார்கள் அவ்வூர்வலச்சிறப்பினையும் ஞான சத்த பூமிகளில் ஒவ்வொரு பூமியையடைந்தவர் ஒவ்வொருபருவத்துப் பெண்ணாக உருவகப்படுத்தி எனது சிற்றறிவிற் கெட்டியவாறு இவ்வுலாப்பிரபந்த மாகச் செய்துள்ளேன்.

இங்ஙன்,
S. பெருமாள்சாமி.

சிவமயம்.

சோமேச நாதருலா.

இது

மதுரை பிரமாநந்த சுவாமிகள்

மடாதிபதி மஹா சன்னிதானம்

ஸ்ரீமது வீர. சோமசுந்தர சுவாமி

அவர்கள் மீது

மேற்படி சுவாமிகளின் பாததூளியாகிய
சோ ம. பெருமாள் சாமியாரியற்றப் பட்டு
சேலம் ஜில்லா ஆத்தூர் மெத்தைவீட்டு
ராமசாமி நாயக்கர் அவர்களால்
வெளியிடப் பட்டது.

குமரன் பிரஸ், மதுரை:—39

—:X சோமேசநாத ருலா X:—

கன்னிபுமை யாடவமே காரணமா யுற்றகயச்
சென்னியா ரைங்கரத்தார்—சேவடியை—யென்னிதயம்
கண்ணுதலாற் சோமேச நாதருலா—யாப்பமைந்து
மண்ணுலகி னிற்கவருள் வார்.

குழகன்

கங்கை யுமையோடு கந்தர் கணங்களெலாஞ்
சங்கையுற சண்டெய்துந்—தாதாவோ—மங்கைதிரு
பூதேவி சாமன் புகல்காமன் சேடரெலா
மேதோவென் றஞ்சவே யீங்கடியார்—நீதோட
மண்காண வந்து வழங்குகரு ணைக்கடலோ
டண்காணும் வேதம் பலதேட—கண்காணுன்
கையகத்தி னுடிலகம் போலெனக்கு காட்சிதர
வையகத்தில் மானுடனுய் வந்துதித்த—செய்யதிருக்
கோலந் தனைநாவாற் கூறவல னேவிந்த
ஞாலம் வருந்தும் நவைதீர்க்கச்—சாலமதாய்
மெய்யேபோல் வந்துதித்து மேலாந் தவங்களெலாம்
செய்யவேகாப்பலெனுஞ்செம்மொழிதான்-பொய்யாது
வந்தகோன் காணுலகீர் வம்மின் பிறப்பறுக்க
இந்த வமயம்போ லெய்தாது—முந்திடுவீர்
ஒன்றிருவர் பேசும்போ தேக்கமுற் றுவனுடன்
நன்றுரைப்பீ ரன்னவரை நாவலரே—என்றழகார்
தேரோடு வீதிகளுஞ் செம்பொனெடு மாமதிளுங்
காரோ டுலாவுங் கவிக்கொடியுஞ் சீரார்
வனசத் திரள்மலிந்த வாவிகளும் வந்தோர்க்கு
அனசத் திரமுதவும் அன்புந்—தினமுமறை

வாய்ந்து நெறிதிறம்பா வந்தணர்கள் வீதிகளும்
வாய்ந்த வணிகர் மணிமறுகும்—வேந்தர்க்கு
மாவசிய மாக மகுடமுடி சூட்டநல்கு
பூவைசியர் வாழும் பொலன் மறுகும்—கோவசியர்
வீதிகளு மிந்திரகுல வீரர்மணி வீதிகளும்
சாதிபல வர்ணத்தார் தன்னிருப்பும்—சேதமைந்த
தூர்த்துக் குடியாந் திருமதிர் திராபுரத்துள்
மூத்தக் குடியாக முன்மொழிய—பூத்தவிசன்
கண்ட குலத்திற் [illegible] னிரட்டியாம்
பண்டைக் குலத்தின் பூமனுஞ்ன்—தண்டமிழின்
சந்த முனிக்கருளுஞ் செந்தூரர் சரிதத்தால்
கந்தசாமிப் பெயர்கொள் கட்டழகன்—அந்தவரை
ஆதரிக்குஞ் சீமானங் கன்புகொண்டு [illegible] அவர்
மாதிரிக்கி ரண்டொன்று [illegible]—ஓதரிய
போத மொழியவல [illegible] மோர்சாது
வேதம் புகழ்கழனி மேம்பதியில்—போசமது
உண்டவர் பேர்சோம சுந்தரனென் றோதிடுவர்
மண்டிசையின் வாக்கினையானே தென்க-பண்டிடைகாட்
டுருடையான் றூனே யறவுடையான் யாமிட்ட
பேருடையான் பேரா யிரமுடையான்—சீருடைய
வாசிட்டங் கூறுதற்கு வல்லவரார் அன்னார்போல்
பேசக் கலிவசிட்டப் பெம்மானே—தாசருக்கு
ஆசகற்றுந் தாதாவென் றேயறைய வம்மாற்றம்
மாசகற்று முள்ளத்தான் மானித்து—வாசவனோர்
தேவர் தொழுங்கூடற் சென்று வளர்பிறைபோல்
மேவு பிரமானந்த மெய்ந்தளியில்—காவலர்க்கும்
காவலனாய் ஓவலிலா நற்றுறவர் காவலனாய்

ஜூ பலை ற வாழ்வோ ணடிபணிந்து—தேவேந்
புண்ணியர்கள் நாளும் புதுமலர்தூய்ப்-பொன்னடிக்கே
நண்ணியவர் பணிந்து நாத்தழும்ப—வெண்ணரிய
பாதனே பாகம் பணிந்தெழுவோர் தம்முள்ளப்
போதனே புத்தேளிர் போற்றரிய—நாதனே
நாரா யணனே சடாதரனே நான்முகனே
தீரா வினைதீர்க்குஞ் சேவகனே—யாரானும்
வேண்டுவார் வேண்டு முருவாகி வேண்டியது
ஈண்டவே யென்றென்றே யீந்தியே—பாண்டையே
எங்கட் கருளா யெனப்பணிய சேற்கணிக்குந்
திங்கட்கா மென்றதுபோற்-செப்பியே—அங்கடைந்து
வர்சிட்ட நூலின் வழியர் மன்றமுடிவின்
மாசட்ட மெய்பொருளை மாந்திரிருள்—கூசிட்டே
ஓடப் பொழிந்தார் உளத்தின் மயக்கமெலாம்
வாடப் பிரமபதி வந்தடியர்—கூடியசீர்
முப்பத்து முக்கோடி தேவர்க்கு வேதாமுன்
செப்பத் துவக்கியதன் சீரேபோல்—வெப்பத்தைத்
தீர்க்க வமுதளித்த மாலின் றிறம்போலே
ஏர்க்க வடவடிபி லீசுரனல்—பேர்க்கிதமாய்
அன்றளித்த ஞானம்போ லையனுப தேசத்தை
இன்றளித்தா னின்றளித்தா னென்றெவருந்—நன்றிருந்து
பூரணமே கேட்ட புனிதநாள் சேட்டமதாய்க்
காரணர்க்குத் தேரொன்று கண்டனரால்—நேர

பவனி

மயனே அழகமைய மாலே மலர்மேல்
அயனே படைத்த தென்வாங்கே—வியவாதார்

யாவரே யெழுவுலகே என்பதுயா ஞங்கதன்மேல்
தூவி மலராலே சோடித்து—ஆவலொடு
கோவே யெழுந்தருளுங் கோமா னெழுந்தருளும்
காவாய் எழுந்தருளுங் கண்ணுமெங்—தேவே
எழுந்தருள வேண்டுமென ஏத்தமறை நாலுந்
தொழுஞ்சோதி யாங்கதன்மேற் றோன்ற-செழுநிலவாம்
பிள்ளை மதியினைமுன் பெற்றெடுத்த தாய்மதிபோல்
வெள்ளை மணிக்கவிகை மேனிழற்றத்-தெள்ளருளே
போலவட்ட மாகவரும் பொய்ச்செல்வ மென்றேபட்
டாலவட்ட மெங்கு மசைந்துவர—ஞாலமெச்சு
மாகதர் கள்பாடி வாதாடச் சின்னமொடு
மாகதர்கள் வானின்று வந்திரங்க—யோகதர்கள்
சித்தர் இயக்கரெலாஞ்—சேணிழிந்து தத்தமக்கு
முத்தி யளிக்கு முழுமுதலாஞ்—சித்துருவன்
காலங் கடந்த கருணைப் பெருந்தகையோன்
கோலந் தனைக்காணக் கூடவும்—ஓலமிடும்
தேவப் பறையொலிபோய்—திக்கின் செவியடைப்ப
யாவப் பவனிக்கு வொப்பிடுவேம்—காவிக்கண்
நங்கையர்கள்—எல்லோரும்—தான்கண்டே நாடினராய்ச்
செங்கை வளையிழந்து சித்திரிகள்—இங்கதன்வாய்
உண்டோ எழுத உரைமி னழைமினென
விண்டோதி யாயம் விரைந்தேகக்—கண்டாளே

பேதை

துன்மதியோர் கூட்டந் துறந்தருளைத் தானடைய
நன்மாது தூரமாம் நற்குணத்தாள்—சென்மபலங்
கொள்ளு நசையல்ல தெப்பதமுங் கோராதாள்
பிள்ளை விளையாட்டைப் பேசவோ—விள்ளரிய

காரியமே யாவருங் காமுறச்செய் தாங்கதனை
யாரிடமுங் கூறு வடக்கத்தாள்—சீரிய
அந்தண் பொதிகை யகத்தினர் பைந்தமிழைச்
செந்தண் முறையாகச் சேவித்துச்—சுந்தரனை
சென்றே பணிந்திடுவாள் சேவிப்பா ளப்பணியோ
அன்றே மலர்வனங்கள் ஆலரசு—சென்றேகும்
பாதைநீர்ப் பந்தலது பாங்கர் சுமையிடுகல்
தீதடையு மேழையர்க்குத் தேவையெலாங்—காதலொடு
செய்யும் வினைதச் சிறப்பின ளாண்டேழு
நையும் பருவத்து நற்பேதை—ஐயெனவே
கண்டதனைச் சென்றே கடிதேகித் தேரதனில்
அண்டர் தொழப்பவனி யாங்கடைந்த—கொண்டறனை
உற்றுற்றுப் பார்த்திட்டா ளுள்ளங் களிகூர்ந்தாள்
பற்றற்ற வெல்லாம் பறிகொடுத்தாள்—சுற்றமது
பொன்னே யெழிலாளே பூங்கொடியே பெண்ணரசே
மின்னே மயிலே விழிமணியே—அன்னே
வருக வருகவென வாராது தாய்நெஞ்
சுருக வுருக வுழல்வாள்—பெருகவிழி
அன்னைமீ ரித்தே ரமர்பவர்யார் மைந்தனிது
பன்னுகவென் றுடைமுதற் பற்றுதலும்-மின்னனையார்
வற்புறுத்த வோர்பொருளை வள்ளுவனார் பத்துமுறை
சொற்பொருத்தி யோதுந் துணிவேபோல்-தற்பதத்தா
லோதும் பிரமமொரு தானென்ப தொன்றனைமால்
காதுபவம் பத்தெடுத்துக் காட்டியபோல்—வேதமது
கூறும் விதிவிலக்கைக் கொள்ளத் தொகுத்தடியார்க்
கேறும் வகையுரைக்கு மேந்தறச்சே—சேறுதற்கு
வித்தார மாகவ்வனர் வேண்டும்போ தத்துணையோ

பத்தா கணக்கின்றிப் பாலிக்கும்—சித்தரிவர்
என்றோத வந்த இளங்கொடியுந் தானகைத்து
நன்றே விளையாட நானவரைச்—சென்றே
அழைமி னழைமினென வாங்கதற்குப் பேதாய்
குழைமதியா மென்றினிதாக் கூற—விழைவதனுல்
பாங்கியே யீசர் பணிபோலுந் தோண்மாலை
வாங்கி யுதவுமென மைக்கண்கள்—தாங்கலுழத்
தாய்மார் பணைத்தவர்தாந் தக்க பருவத்தே
வேய்வா ருனக்கென வேவேண்டிச்—சேயதனை
யில்லந் தனிற்சேர்க்க யீசருலாச் சேவித்து

பேதும்பை

நல்ல வொருபெதும்பை—நாணிழந்து—சொல்லுவர்ள்
நானு ருலகெனைத்து நற்றீங்கு சக்கிரம்போல்
ஆனு துறவேற்கு மாடானர்—ஊனுமேல்
என்னதுகால் கைமூக்கு நாக்கா மெனப்பிரித்துச்
சொன்னு லுரிமையதாய்த் தோன்றுமே—மன்னுமுயிர்
தானென்னிற் றாக்கந் தனிலுறலால் அத்துயிலில்
வனென்று கேட்கவகை யில்லையே—ஆனந்தம்
இன்னலெலாங் காணுகிற புத்தியோ வென்னிலது
தன்னதென வெண்ணுந் தகைமையதே—பின்னுமனம்
சொல்லப் புமானென்னிற் சோம்புறவ தஞ்ஞானம்
அல்லவெனிற் சூனியந்தா னுமோபின்—நல்லனதான்
சுத்தஞ் சுகநித்தஞ் சோதி வியாபகமாய்
அத்து விதமமல மாஞ்சயமே—எத்திசையுந்
தானேதா னும்பரம தத்துவத்தை யோதிடுநூல்
யானே யதுவென் றறைதலினுற்—றானேது
விட்ட விடாதன விட்டுவிடா தென்றுரைக்குங்

திட்டமாம் லக்கணையார் லேதெளியப்—பட்டதென
நாணாநெஞ் சிந்திக்கு நல்லமட மானொப்பாள்
வாணாளோ மும்மூன்றவ் வாலைக்குத்—தேனுறுஞ்
சொல்லாள் சிவவடிவச் சோதியாள் முல்லையெனும்
பல்லாள் கமலப்பூம் பார்வையாள்—வில்லாரும்
நீண்ட புருவத்தாள் நெற்றி பிறையொப்பாள்
காண்டற் கினியசீர் காமினியாள்—வேண்டவரந்
தந்தருளும் பெம்மானைத் தாதியொடுங் கண்ணுற்றாள்
பந்தத் துருவிழுந்தாள் பாக்கியத்தாள்—அந்தமிலான்
வேதப் பரிபூண்ட மெய்த்தேர் வலம்வந்தாள்
நாதப் பறையாலாஞ் ஞானத்தால்—தீதற்றா
வன்னங் குலைந்தாடன் மேனிமயிர் பொடிப்பச்
சின்னப் பருவத் திறம்போக்கி—தன்னுருவு
காணா வியப்பெய்திக் காதலித்து நின்றேதுந்
தோணாதப் பூவையினைத் தோழியர்கள்—பேணாநின்
றோதுவார் கூறாதியுன் உள்ளக் கிடையதனைத்
தீதின்றிச் செய்துமெனத் தேருடையான்—பாதமதைக்
கூட்டுவீ ரென்றுரைக்கக் கோலப் பசுங்கிளியே
வீட்டு விரகுனக்கேன் மேவுமோ—கேட்டதனை
சாரநெடு நாளாத் தனித்திருந்து கானகத்தில்
நேர வுணவிலைகாய் நீராகத்—தீரமுடன்
சித்த மலமேகச் செய்தா லவர்தாமே
நத்துவார் வாவென்ன நாண்பூட்டி—சித்தசனார்
விட்டிடற்கு வம்மூலை மேவும் விநாயகற்குக்
குட்டிக்கொண் டெய்யநாண் கொண்டகன்றான்—சுட்டிட
ஒப்பாக வேதற் கொருபொருளு மில்லான்றோர்
அப்பான் மறாகி னடைந்ததால்—இப்பாலே

நல்லதொரு ஆசான் நயந்தமொழி சாத்திரந்தான்
சொல்லும் பொருளெல்லாஞ்—சோதித்து—அல்லவிது
ஆமெனவே கொள்ளுங் கலையா ளருந்தவத்தின்
சேமமெனக் கூர்ந்துளத்தைச்—சேதித்து—நேமமுடன்
கள்ளமனச் சார்பாக் கதித்தோங்கு வாசனையை
மெள்ளக் கிளறி விடைகொடுத்து—உள்ளுரவாம்
வாசனை யாங்காலாள் மற்றொன் றிலாவிடையாள்
நேச வுறுதி நிகழ்வயிற்றாள்—பாசமெலாம்
தீர்க்கு மறிவும் விராகத் திருமுலையாள்
காக்கின்ற பத்தியாங் கண்டத்தாள்—ஆக்கமுறச்
சந்தோட மென்னுமுகத் தாமரையாள் தத்துவந்தான்
வந்தேறும் வள்ளையெனுங் காதுடையாள்-தொந்தனைதீர்
சொல்மணமாக் கொள்ளெள்ளின்—தூய மலர்மூக்காள்
நல்லவரை நோக்கும் நறுவிழியாள் வெல்லும்
அறியாமை காட்டுமள—கத்தாள் வந்திக்கும்
குறியால் புகழ்கொள் கரத்தாள்—நெறியாஞ்
சுவையொளி யூறோசை நாற்றந் தொகையின்
நவைநீக்குங் கங்கணமே நாட—விவையன்றிச்
சுட்டிலா ஞானத் துருவாற் பிணைக்கின்ற
நட்டமிடு மிந்தியமா நற்சடையாள்—தட்டிலா
வேணபடி வூர்நாய்போல்—மேவுமனத்—தீமைகளைக்
காணும் மணியாருங்—கச்சணிவாள்—மாணவரும்
செல்வநிலம் வாகனங்கள் சேவையாள் புத்திரரும்
பல்வளத்த மாடம் பசுக்களினால்—சொல்வ
பருகின்ப துன்பமெலாம் பண்டைவினை யாலென்
றுருகுசுவை யாமமிர்த வுண்டியாள்—பெருகவற்றின்

எண்ணந்தா னேவிட வீசனடி யார்குருவால்
திண்ணமே தம்பலமாஞ் செவ்வாயாள்—வண்ணமயிற்
சாயலாள் வேதாமுன் றுனியற்ற ரம்பைகளை
ஏய வமைத்தகனி யென்றேத்த—ஆயவள்பால்
சென்றுடிப் பண்ணையுஞ் சேராமலோடும்
தன்றோழி யேகளிப்பாற் றுனைந்து—இன்றோட
அஞ்ஞானம் போக்கும் அழகன்றேர் நந்தெருவில்
விஞ்ஞான மின்னே விரைந்தெனச்—சுஞ்ஞானி
கேட்டவனை முற்றுளே கேடில் பொருளதனை
நாட்டந்தான் சந்திரனை ரோகணிநாள்—வீட்டினபோல்
கோசிகர்பின் னேயிதிலே கொண்டறனி ராகவனூர்
பூசிவரக் காணுகிற சானகிபோல்—வாசவன்முன்
திக்கினர்தங் காவற் றிறமிழக்க வோட்டியநாள்
அக்கைலைச் சுந்தரனா ராங்கடைய—எக்கணமும்
வெற்றிகொளு மீனாட்சி மெய்நோக்கொத் திம்மங்கை
நெற்றி வியர்வோட நீலவிழி—யுற்றவரின்
பாதமுத லாமேனி பார்த்த வடிவழகை
ஓதமுகந் தாணோசீர் ஓங்கருளோ—நீதறவே
சொல்லிரக்கமோ கண்ணோ தொண்டர் பயந்தீரும்
நல்லசுட ரோகையோ நாதமோ—வல்லவுரை
அன்பர் தவத்தா வழைக்குமொலி யேகேட்கும்
கன்பொறி யோகாதோ நாணாளும்—என்புருகி
இவ்வுடலிற் காணு மியல்போ வெனக்கருதி
பெளவப் பிறவிப் பயனடைய—எவ்வழியென்
றுன்னு நிராசை யுணர்வோ குருமுனிவர்
தன்னுருவு காட்டுந் தவப்பயனோ—மின்னுடலும்
வேத முதலா விளங்கடியார் தம்புகழை

பாதமோ தண்கமல பாளிதமோ—மாதவந்தான்
இல்லாக் கடையேற்கு நண்ணுங்கொ லென்றேங்கி
சொல்லாக் கனிந்துவிழி சோரநீர்—நல்லாடை
கைவளையுங் கூந்தல் மலரும்விழக் காண்கின்ற
மைவிழியார் தாங்கி மனையடைந்து—தெய்வமே
காவாயிம் மங்கையினைக் காவா யெனவேத்தி
பாவாயுன் காதல் பயனுடைத்தே—தேவாதி
தேவர் தொழும்வீர சோமேச தேசிகர்தாள்
மேவத் தடையாது மென்கொடியே—நோவதற்கு
காரணமேன் சீதை கணவனலன் மாதுலன்போல்
ஆரணங்கு யாவரையும் ஆதரிப்பான்—சீரணங்கே
வைகலே உன்றன் மணம்பேச வானெலாஞ்
செய்வ துணவருந்து சீக்கிரமே—மையாய்
உறங்கா யென்பலகா லோதியமை செய்து
கறங்கின் மனம்வேள் கணையால்—இறங்கும்
எழுந்திருக்கு மேமாந்து பூமாந் தவிசில்
விழுந்திருக்கும் வெண்ணிலவால் வேகும்—கழிந்திலவே
ஊழி பலவோ விரவாயிற் றேவென்னுங்
கோழி குரலடைத்த தோவென்னும்—வாழிய
வெங்கோ னடிவாழி யென்றே பிதற்றிடவாய்
சங்கேத மாகின்ற தாய்மார்கள்—அங்கடைந்து
எத்தனித்து வேண்டு மிதஞ்செய்ய மற்றொருசார்
தத்துவன்றோர் சென்ற தருணத்தில்—வித்தகமாய்

மடந்தை

சொல்லு மடந்தை மிகத்தூ மொழியாளாம்
நல்லகுரு வாம்பரம நாதனைப்—புல்லிநிதம்
இன்பமே துய்க்கு மினியகனி யெவ்விதத்துந்

துன்பஞ்சே ராவுளத்தின் சோதியாள்—அன்பரொடு
கூடிக் குலாவிக் குருபுத்திரர் பலரை
நாடி யவரவர்க்கு நல்குந்தாய்—வாடியே
வந்திரக்கும் யாசகர்க்கு வாய்சலியா தையமதைத்
தந்தனுப்ப வல்ல தவத்தினள்—முந்தகுரு
வாமா துலர்க்கன்பி னாலே புபசரித்துத்
தாமா தரிக்குஞ் சரியாக— பூமாது
போற்றப் பொலியும் புலனார் சகோதரர்க்கு
ஏற்றபடியளிக்கு மின்னளியாள்—தேற்றுகுரு
சீர்பாதந் தன்னுருவாய் சிந்தித்து நற்பொருளை
கார்புரையப் பெய்தருளும் கற்பினள்—ஓர்போது
வந்தவர்கள் மென்மேலும் வாழ்த்திப் பணிந்தெழுந்து
சந்தனங்க ளாரங்கள் சாத்திடினும்—வெந்துளந்தான்
கொய்துடலைச் சுட்டாலுங் கோணு தினையளைத்தும்
செய்துள்ள கன்மச் செயலாகும் கைவெதற்கு
புன்மை யினானன்றே பூச விடுவரென
வன்மமாக் கொள்ளாத மாண்பினள்—தன்மமாந்
தேவேபோல் மேனித் திறத்தாடன் காதுகளில்
ஆவதைப்போல் கேளா வருமோசை—மேவுதலென்
என்றே புறம்போந்தா னொல்லா முடையான்சீர்
நன்றே யிருந்தமையி னடினள் - அன்றேதன்
செவ்வி குலைந்தாள் திகைத்தாள் பதைத்தேங்கி
இவ்வழகி னுருண்டோ வென்றான்னும் - நவ்வியவள்
நின்றுளக் காலை திருமலனார் பூரணனார்
பொன்றேர் மருங்ககன்று போயதுவால் - பின்றான்

அரிவை

தெரிய வரிய சிவனடிபோற் றேவர்க்

கரிய வமுநா மரிவை - விரியுமுலை
கத்தனையுஞ் சான்று யனைத்தின் சுபர்வம்தாய்.
சித்தருவாய் மேலாந் திருவினள் - பகுதியினோர்
உள்ளந் தழைய வொளிரும் விளக்கெனவே.
கொள்ளக் கொடுக்குங் கொடையின்ல் - வள்ளலை
ஒப்பரோ தன்னை யுதவலர் ஏலங்கதற்குச்
செப்பு மறைநாலுந் தேராக - மெய்ப்பொருளின்
கட்டப் பிறவிக் கருவைக் கணமொன்றில்
வெட்ட வலகெப்பிர வீரமாம் - பட்டமனதக்
கொண்ட பெருமாட்டி கோவணமே தற்காப்பாய்
உண்ட இலைபயிக்க முஞ்சகத் - தண்டமோடு
வெற்றிகொள வம்பாக மேவினரைத் தாக்கமநு
கற்ற திறங்காட்டிக் கையாமல் - முற்றவே
கையின் மணியென்ன யாவர்க்குங் கண்ணளிக்கும்
தூய குணக்குன்றாள் தோன்றாது - நைபவரைப்
பக்குவமே செய்கின்ற பாதார விந்தத்தாள்
துக்கந் தனைத்தீண்டாத் தோற்றத்தாள் - எக்கணமும்
ஆனந்தங் காணு மரிவை திருவுருவை
நானெங்க வாறு நவிலுவேன் - பூநந்தும்
மாவெனவோ பாண்டி மன்னனார் ஈன்றெடுத்த
கோவெனவோ கல்விக் குரித்தான - தேவெனவோ
மற்றுரை யொப்பிடினும் வார்த்தையா லேயன்றி
உற்ற பொருட்குநேர் ஒவ்வுமோ - சொற்றற்கு
நென்னேரே புல்லெனினு நேராமோவ ரங்கதற்குத்
தன்னே ரிலாதபர தானத்தாள் - அந்நேரம்
போதருவா ளாங்கே முனஞ்செய்த புண்ணியத்தாள்
காதலனுச் சுந்தரன்சேர் கௌரியென - ஆதவரும்

திக்கினரும் ருத்திரரும் தேவ மருத்துவரும்
பக்கம் புடைசூழப் பாரதனில் - விக்கினரே
ஓர்கோலங் கொண்டாள வுற்ற பவனியதன்
சீர்காண லுற்றாள் திகைப்பெய்தி - பார்கோண
வீழ்ந்து களித்தவளாய் மேனிபொடிப் பக்குழல்
தாழ்ந்தே சரியத் தளாடியுரை சூழ்ந்து- வந்தோன்
பாதமே போற்றிப் பரிவெய்திச் சென்றாள்பின்
மாதுவன்தேர் வேறோர் மருங்கெய்தக் - கோதிலாச்

தெரிவை

சித்தஞ் தனிற்சிவமாய்ச் சிந்தித்து நாடோறும்
பெத்தங் களைந்தருளைப் பேணுவாள் - முத்திக்
குருவிதுவே யென்ன வுயர்தவத்தோ ரென்றும்
பருக வினிதான பாகு - பரனடிக்கு
வாடப் படாதமலர் யாமுனிவ ரெஞ்ஞான்றும்
பாடப் படுந்தெய்வப் பாமாலை - தேடிக்
கலைதடுமா றத்தன்னைக் காத்த தனைப்பார்த்துத்
தலைதடுமா றுந்தெரிவை தன்னின் - நிலைதவறித்
தேரேது வந்தவரார் முப்புரமே தீயாக்கும்
போரேது ராவணப்போ ரோவென்னில் - நேராது
இக்கலியி லென்னும் இருக்கி னுரையிழுக்காம்
தக்கன்போ ராமோ தரணிபல - மிக்காண்ட
தாருகப்போ ரென்னிலது சாலுமே சாத்திரந்தான்
பாருமினோ வென்று பலதத்துருகி - நேருமவர்
கண்பட்டா ளந்தோ கருணைப்ர வாகத்தே
பண்பட்ட வாதவூர்ப் பாவலர்போல் - எண்பட்டாள்
நாதன் பவனிதனைக் காணுதற்கு நாணின்று
மாதவ மேதென்று மையலினால் - ஓதுவாள்

கன்றுபயிர் மேயக் கடவின் செவியரிந்தான்
நின்றுதலை வற்கா ணிணைவிழிகள் - நன்றிருப்பக்
கொங்கை யழகழியக் கொள்வதேனோ கொல்பவற்குச்
சங்கர னென்னும்பேர் சாலுமோ - செங்குதலைப்
பிள்ளைப் பழியாளர் பெண்பழியை யஞ்சுவரோ
கள்ளுண்ணும் வண்டே கடிதேகி - விள்ளுவாய்
ஊர்கோலங் கொண்ட வெ[illegible]வர்க்கு இதுதனை நீ
யார்காணத் தேரோடீண் [illegible] - கா[illegible]காண
நக்சு மயிலெனவே [illegible] வர்கள் ந[illegible]டாது
பச்சைப் புரவியெனப் [illegible]வானேன் - இ[illegible]சையால்
வேண்டினு ளோர்மாது மெல்ல [illegible]மென்
ஆண்டவ ரைத்தாழ்ந்[illegible]றுகென்று - பா[illegible]வர்க்கு
சுந்தரர்க்கு மன்றொருநாள் தூதான [illegible]
எந்த விதம்பெற[illegible] மென்றான[illegible] - [illegible]செம்மலடி
அன்னங் குயில்பூவை யாயங் [illegible]முந்தவே
இன்னம்பல் லோரிருக்க [illegible]ழமனம் [illegible]கிளியயிலே
சீர்பாதஞ் சூடுங் கழுநீர்[illegible] தன்னெனதென
சார்பாக வாங்கத் மாலைதனை
வந்திலவே யென்னை தனிவிடவே - நேர்போதில்
சந்தனை யுந்தன்னைத் மறந்தவ் வடிவமமாய்
நான்மறந்த - யிந்தநிலை
எங்குரைப்பே னன்றையென் றேங்கவே வாங்கதற்பின்
சங்கரன்தேர் - செல்லுந் தருணத்தில் - அங்கனங்கின்
பேரிளம் பெண்
தூய வடிவாள்
றரியத்
காயமே காணத்
திருத்தலினுட்
தீரொடுகா லக்கினிவான் காந்திமதி - மேயபுவி
சாரப் பிரளயமே நேரந்
தான்வரினும் - [illegible]

அஞ்சா - நலமுடையா ளாகாயத் தேவிமூதா
நெஞ்சாரக் கண்டாலும் நீங்குமுயிர் - உஞ்சேதான்
உற்று லதிசயமா வுன்னுதா ளக்கலை
சற்றே சுகமென்று தானுன்னும் - பற்றுக
ஏதுமி லாச் சுந்தரியேல் இன்பநிலை மாடியிலே
காது பவந்தீர்க்குங் காட்சியனை - சோதனையாக்
கண்டதன்வா யுற்றுளே காமன்பூ பீடழிய
பண்டெரிந்த வெண்ணத்தால் பாய்ந்தேறி - விண்டுதனை
எய்தப் பிரானேறும் எல்லா மறுகும்விட்டு
வைதிக மாங்கோயில் வந்தடைய - நெய்த்திரியால்
ஆலமே காட்ட வநேகம்பேர் கீர்த்தனத்தால்
கோலமே வாழிய கோகிலடி - சீலமதாய்
வாழி யெனவேதம் மாவுலகை யெல்லாரும்
வாழவே வந்தா னுலா

தேவுளதே யென்றுளத்திற் றேக்குமியற் பேதைமுதற்
யாவுந்தா னுக்கானு மைந்திருபால் பூவைமார்
வந்தே களிப்பெய்த மாசோம சுந்தரனார்
தந்தார் திருப்பவனி தான்

சுபம். சுபம். சுபம்.



முருகன் துணை.

குமரன் பிரஸ்

பிரிண்டிங் &



பப்ளிஷிங்,

தெற்கு மாரட்டு தெரு மதுரை.

M. V. பாலுசாமி அய்யர் Pro,